ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

தொடர்பூட்டல் திணைக்களம்
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477311
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

வெளியிடுபவர் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்

திகதி 20.10.2015

## நாணயக் கொள்கை மீளாய்வு - 2015 ஒத்தோபர்

ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில், முதன்மைப்பணவீக்கம் 2015 யூலை மற்றும் ஓகத்து மாதகாலப்பகுதிகளில் பதிவு செய்த -0.2 சதவீதத்திலிருந்து 2015 செத்தெம்பரில் -0.3 சதவீதத்திற்கு மேலும் வீழ்ச்சியடைந்தது. ஆண்டுச் சராசரி அடிப்படையில், முதன்மைப் பணவீக்கம் தொடர்ந்தும் மிதமானதாக விளங்கி முன்னைய மாதத்தின் 1.0 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2015 செத்தெம்பரில் 0.7 சதவீதத்தினைப் பதிவுசெய்தது. 2014 இறுதியிலும் 2015 இன் தொடக்கத்திலும் நிருவாகரீதியாக நிர்ணயிக்கப்பட்ட விலைகளில் செய்யப்பட்ட கடுமையான கீழ் நோக்கிய சீராக்கங்களின் தாக்கம், மேம்பட்ட உள்நாட்டு நிரம்பல் நிலைமைகள், சாதகமான உலகளாவிய பண்ட விலைகள் மற்றும் குறைந்தபட்ச பணவீக்க எதிர்பார்ப்புக்கள் என்பன முதன்மைப் பணவீக்கம் ஏறத்தாள பூஜ்ய மட்டத்தில் தொடர்ந்தும் காணப்படுவதற்கு உதவின. இருப்பினும் கூட, கூட்டுக் கேள்வி நிலைமைகளின் உறுதியான தன்மையினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் மையப் பணவீக்கம் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் முன்னைய மாதத்தின் 3.9 சதவீதத்திலிருந்து 2015 செத்தெம்பரில் 4.2 சதவீதத்திற்கு அதிகரித்தது. முக்கிய நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபாவின் தேய்மானம் பணவீக்கத்தின் மீது தாக்கத்தினைக் கொண்டிருந்தபோதும் 2015இறுதியளவில் முதன்மைப் பணவீக்கம் தாழ்ந்த ஒற்றை இலக்க மட்டத்தில் வசதியானவிதத்தில் காணப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

வெளிநாட்டுப் பக்கத்தில், 2015இன் முதல் எட்டுமாத காலப்பகுதியில் இறக்குமதிகள் மீதான ஒன்று சேர்ந்த செலவினம் ஐ.அ.டொலர் 12,559 மில்லியன் டொலர்களாக அமைந்து 2014இன் தொடர்பான

காலப்பகுதியிலிருந்தும் பெருமளவிற்கு மாறுபடாதிருந்த போதிலும் இதேகாலப்பகுதியில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொ. 7147 மில்லியனுக்கு3.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. எண்ணெய் அல்லா இறக்குமதிகள் ஆண்டு முழுதும் அவற்றின் அதிகரித்த போக்கினைப் பதிவு செய்தன. வர்த்தகப் பற்றாக்குறை ஓகத்து மாதத்தில் குறுக்கமடைந்த போதும் ஒன்றுசேர்ந்த அடிப்படையில் இது ஆண்டின் முதல் எட்டுமாத காலப்பகுதியில் விரிவடைந்தது. முதல் ஒன்பது மாதகாலப்பகுதியில் சுற்றுலாத்துறையிலிருந்தான வருவாய்கள் ஒன்றுசேர்ந்த அடிப்படையில் 18.8 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்திருப்பதாக மதிப்பிடப்பட்ட வேளையில் தொழிலாளர் பணவனுப்பல்களும் ஆண்டின் முதல் எட்டு மாதங்களிலும் 1.8 சதவீதம் கொண்ட சிறிதளவு வளர்ச்சியைப் பதிவு செய்தன. ரூபாவானது 2015இல் இதுவரை ஐ.அ.டொலருக்கெதிராக ஏறத்தாள 7 சதவீதத்தினால் தேய்வடைந்தது. உண்மைத்தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண்கள் சீராக்கப்பட்டமையும் பொருளாதாரத்தின் வெளிநாட்டுப் போட்டித் தன்மைக்கு ஆதரவளித்தது. செலாவணி வீதங்களை நிர்ணயிப்பதற்கு பெருமளவு நெகிழ்ச்சித் தன்மையினை அனுமதிப்பது என்ற மத்திய வங்கியின் தீர்மானமும். நடைமுறை மற்றும் நிதியியல் கணக்குகளுக்கு ஏனைய உட்பாய்ச்சல்கள் கிடைக்குமென எதிர்பார்க்கப்பட்டமையும் வெளிநாட்டுத் துறையின் மீளெழுச்சி முன்னோக்கி நகர்வதற்கு வலுவளித்துள்ளது போல் தோன்றுகின்றது. அதேவேளை, 2015 ஓகத்தின் இறுதியில் ஐ.அ.டொலர் 6.5 பில்லியனாக விளங்கிய மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2015 செத்தெம்பர் இறுதியளவில் ஐ.அ.டொலர் 6.8 பில்லியனுக்கு அதிகரிக்குமென மதிப்பிடப்பட்டிருக்கிறது. அரசாங்கத்திற்கு நீண்டகால வெளிநாட்டு நிதியியல் பாய்ச்சல்கள் எதிர்பார்க்கப்படுவதன் காரணமாக ஆண்டின் எஞ்சிய காலப்பகுதியில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் மேலும் அதிகரிக்குமென எதிர்பார்ககப்படுகின்றது.

நாணய துறையில், விரிந்த பணத்தின் ($M_2b$) ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சி, முன்னைய மாதத்தின் 16.2 சதவீதத்திலிருந்து 2015 ஓகத்தில் 16.8 சதவீதத்திற்கு மேலும் விரைவடைந்தமைக்கு வங்கித் தொழில் முறைமையினால் தனியார் மற்றும் அரச துறைகளுக்கு வழங்கப்பட்ட கொடுகடன் விரிவடைந்தமையே தூண்டுதலாக அமைந்தது. ஓகத்தில் வர்த்தக வங்கிகளினால் தனியார்துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடன் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் முன்னைய மாதத்தில் 21.0 சதவீதம் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 21.3 சதவீதத்தினால் அதிகரித்தது. முழுமையான நியதிகளில் ஓகத்து மாத காலப்பகுதியில் தனியார் துறைக் கொடுகடனின் விரிவாக்கம் ரூ.64.7 பில்லியனாக இருந்ததுடன், 2015இன் முதல் எட்டு மாதகாலப்பகுதியின் ஒன்றுசேர்ந்த அதிகரிப்பு ரூ.310.5 பில்லியனாகக் காணப்பட்டது. குறுங்கால வட்டி வீதங்களில் சில உறுதிப்பாடுகள் அவதானிக்கப்பட்டதுடன், பெரும்பாலான சந்தை வட்டி வீதமானது தொடர்ந்தும் குறைந்த மட்டங்களிலேயே காணப்பட்டது.

பொருளாதாரத்தின் சில துறைகளில் உருவாகிய தளம்பல்களைக் கட்டுப்படுத்துவதற்காக மத்தியவங்கியினாலும் அரசாங்கத்தினாலும் மேற்கொள்ளப்பட்ட கொள்கை வழிமுறைகளின் தாக்கம் பேரண்டப் பொருளாதார தரவுகளில் இன்னமும் பிரதிபலிக்கப்படாத போதிலும் இவ்வழிமுறைகள் அவற்றின் தாக்கத்தினை செலுத்த ஆரம்பித்துள்ளமைக்கு சில அறிகுறிகளைக் காணமுடிகிறது. அதேநேரம், வலுவான பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாட்டினை உறுதிப்படுத்துவதற்காக மத்திய வங்கி கூட்டுக் கேள்வி நிலைமைகளில் ஏற்படும் அபிவிருத்திகளைத் தொடர்ந்தும் கண்காணிக்கும்.

பொருளாதாரத்தில் ஏற்பட்ட மேற்குறிப்பிட்ட அபிவிருத்திகளை பரிசீலனையில் கொண்டு, நாணயச் சபை 2015 ஒத்தோபர் 19வது நாள் நடைபெற்ற அதன் கூட்டத்தில் மத்திய வங்கியின் தற்போதைய நாணயக் கொள்கை நிலை பொருத்தமானது என்ற கருத்தினைக் கொண்டிருந்தது. இதன்படி

நாணயச்சபை, மத்திய வங்கியின் துணைநில் வைப்பு வசதி வீதங்களையும் துணைநில் கடன் வழங்கல் வசதி வீதங்களையும் முறையே 6.00 சதவீதத்திலும் 7.50 சதவீதத்திலும் பேணுவதென தீர்மானித்தது.

| **நாணயக் கொள்கைத் தீர்மானம்** | **கொள்கை வீதங்கள் மாற்றமடையவில்லை** |
| --- | --- |
| துணைநில் வைப்பு வசதி வீதம் | 6.00% |
| துணைநில் கடன் வழங்கல் வசதி வீதம் | 7.50% |
| நியதி ஒதுக்கு விகிதம் | 6.00% |